(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 89.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2021 ஆகஸ்ட் 05,வியாழக்கிழமை, மு.ப. 10.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

72/2020

கௌரவ ஹேஷா விதானகே,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை திண்மக் கழிவு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய சர்வதேச பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றிய உள்ளூராட்சிமன்ற பிரதிநிதிகளின் எண்ணிக்கையானது ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பிரதிநிதியினதும் உரிய உள்ளூராட்சிமன்றத்தின் பெயர்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) அந்த ஒவ்வொரு செயலமர்வும் இடம்பெற்ற நாடு, நகரம் மற்றும் காலப்பகுதி என்பவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு செயலமர்விலும் பங்குபற்றுவதற்காக செலவிட்ட பணம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(v) அச்செயலமர்வுகளின் பின்னர் திண்மக் கழிவு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்திய உள்ளூராட்சி மன்றங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

244/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மருத்துவ தொழில்நுட்ப உபகரணங்களின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி மருத்துவ தொழில்நுட்ப உபகரணங்கள் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி மருத்துவ தொழில்நுட்ப உபகரணங்களை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு மருத்துவ தொழில்நுட்ப உபகரணங்களை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

260/2020

கௌவ சமிந்த விஜேசிறி,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகார சபையின் தற்போதைய அங்கத்தவர்களின் பெயர்கள் மற்றும் தகைமைகள் யாவை என்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) கடந்த காலப்பகுதியில் சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகார சபையின் நிர்வாக நடவடிக்கைகளில் சீர்குலைவு ஏற்பட்டிருந்ததென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) ஆமெனில், சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதியின் நிர்வாக நடவடிக்கைகளை முறைசார்படுத்துவதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4.

323/2020

கௌரவ புத்திக பத்திறண,— சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்குத் தனித்துவமான பிளாந்தன்களினதும் அத்தகைய தாவர வகையினங்களினதும் எண்ணிக்கை எத்தனை;

(ii) அவற்றுக்கு மத்தியில் அழிவடையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதன் காரணமாக சிவப்பு தரவுப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பிளாந்தன்கள் மற்றும் அத்தகைய தாவர வகையினங்கள் யாவை;

(iii) இன்றளவில் அழிவடைந்துள்ள இலங்கைக்குத் தனித்துவமான பிளாந்தன்கள் மற்றும் அத்தகைய தாவர வகையினங்கள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கைக்குத் தனித்துவமான பிளாந்தன்கள் மற்றும் அத்தகைய தாவர வகையினங்கள் தொடர்பாக அண்மையில் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அது மேற்கொள்ளப்பட்ட திகதி யாது;

(iii) இன்றேல், அத்தகைய ஆய்வு நடத்தப்படுமா;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கைக்குத் தனித்துவமான பிளாந்தன்களையும் அத்தகைய தாவர வகையினங்களையும் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை,

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை,

என்பதை அவர் மேலதிகமாகவும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5.

619/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது கலைப் பிரிவில் வெளிவாரி பட்டப் படிப்பு கற்கை நெறிகளுக்கென பரிந்துரைக்கப்பட்டுள்ள பாடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பாடங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி பாடப் பிரிவுகள் ஏதேனும் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில் அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) நடப்பு தொழில் சந்தைக்கும் உலகப் போக்குகளுக்கும் இசைந்தொழுகக்கூடிய வெளிவாரி பட்டதாரிகளை உருவாக்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

818/2020

கௌரவ சாந்த பண்டார,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்திற்கமைவாக உள்நாட்டுக் கைத்தொழில்களை ஊக்குவிப்பது அரசாங்கத்தின் நோக்கமாகும் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட புதிய கைத்தொழில்கள் யாவை என்பதையும்;

(ii) 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ள புதிய கைத்தொழில்கள் மற்றும் அவை ஆரம்பிக்கப்படவுள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கைத்தொழில்ளை ஆரம்பிப்பதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முன்வந்துள்ளனரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

834/2020

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— மின்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சூரிய மின்சக்தி, காற்றலை மின்சக்தி மற்றும் சிறிய மின்னுற்பத்தி நிலையங்களிலிருந்து மின்சாரம் கொள்வனவு செய்யப்படும்போது இலங்கை மின்சார சபையினால் பின்பற்றப்படும் முறையியல், ஒவ்வொரு கொள்வனவு வகையின் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) நிலையான விலையில் மின்சாரம் கொள்வனவு செய்யப்பட்ட காலப்பகுதியில், மேற்கூறப்பட்ட மின்சார கொள்வனவுகளின்போது அலகொன்றுக்கு இறுதியாக செலுத்தப்பட்ட விலைகள், ஒவ்வொரு கொள்வனவு வகையின் அடிப்படையில் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி (ii) இல் குறிப்பிட்ட விலைகள் தீர்மானிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

851/2020

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலனறுவை மாவட்டத்தில் அமைந்துள்ள பிரதான வாவிகள் பலவற்றில் சல்வீனியா எனப்படும் பாசி வகை வளர்ந்துள்ளதென்பதையும்;

(ii) மேற்படி வாவிகளுக்கு மத்தியில் கிரிதலே விவசாய குடியிருப்புத் திட்டத்திற்கான தம்பல வாவி மற்றும் கடவல வாவி ஆகிய வாவிகளில் இந்த பாசி வகை பெருமளவில் வளர்ந்துள்ளதென்பதையும்;

(iii) மேற்படி வாவிகளில் பாசி வளர்ந்துள்ளதனால் அவற்றில் சேகரித்து வைக்கக்கூடிய நீரின் அளவு குறைந்துள்ளதோடு அவ்வாவிகளிலிருந்து விவசாய நடவடிக்கைகளுக்காக வழங்கப்படும் நீரின் அளவும் குறைந்துள்ளதென்பதையும்;

(iv) கடவல வாவி மழைக் காலங்களில் பெருக்கெடுப்பதோடு அந்த நீரில் அடித்து வரப்படுகின்ற பாசி விதைகளின் மூலம் அவ்வாவியைத் தொடந்து கீழ்ப் பகுதியில் அமைந்துள்ள பராக்கிரம சமுத்திரத்தில் பாசி பெருகுவதற்கான ஆபத்துள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறாயின், தம்பல வாவி மற்றும் கடவல வாவி ஆகியவற்றில் தற்போது வளர்ந்துள்ள பாசியினை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

931/2020

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைப் புலம்பெயர் தொழிலாளர்களை இலங்கைக்கு மீள அழைத்து வருவதற்காக விமான வசதிகளை வழங்குவதன் பொருட்டு அனுமதியளிக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்களைத் தெரிவுசெய்த செயன்முறை யாதென்பதையும்;

(iii) மேற்படி புலம்பெயர் தொழிலாளர்களை இலங்கைக்கு மீள அழைத்து வருவதற்கு மேற்குறிப்பிட்ட நிறுவனங்கள் அநீதியான முறையில் கட்டணங்களை அறவிடுகின்றன என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கைக்கு மீள வருகின்ற இலங்கைப் புலம்பெயர் தொழிலாளர்களை தொற்றுத் தடைகாப்பின் நிமித்தம் தனிமைப்படுத்துவதற்கு அங்கீகாரமளிக்கப்பட்டுள்ள தனியார் நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) அந் நிறுவனங்களைத் தெரிவுசெய்த செயன்முறை யாதென்பதையும்;

(iii) இலங்கைக்கு வருகைதந்துள்ள இலங்கைப் புலம்பெயர் தொழிலாளர்களை தொற்றொதுக்க தனிமைப்படுத்தல் செயற்பாட்டுக்காக மேற்படி நிறுவனங்கள் அநீதியான முறையில் கட்டணங்களை அறவிடுகின்றன என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

974/2020

கௌரவ எஸ். எம். எம். முஸ்ஸாரப்,— நீர்வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பொத்துவில் பிரதேச சபையானது தமது ஆளுகைப் பிரசேத்தில் அமைந்துள்ள வீடுகளுக்கு சீரற்ற முறையில் நீர் வழங்குகின்றது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள, நீர் மற்றும் கழிவு நீர் அகற்றல் வசதிகளற்ற வீடுகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி வீடுகளுக்கு நீர் மற்றும் கழிவு நீர் அகற்றல் வசதிகளை வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா;

(iii) ஆமெனில், இதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

வலுசக்தி அமைச்சர்,— பெற்றோலிய வளங்கள்,— இலங்கைப் பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபையைத் தாபிப்பதற்காகவும்; ஆரம்பநிலை பெற்றோலியக் கைத்தொழில் மீதான தேசிய கொள்கையொன்றை உருவாக்குவதற்காகவும் இலங்கையிலுள்ள நவீன தேடிக்கண்டறிகை, அபிவிருத்தி, தயாரிப்பு மற்றும் முகாமைச் செயல்முறைகளினூடாக உள்நாட்டுப் பெற்றோலிய வளங்களின் அதிகபட்ச பொருளாதாரப் பெறுமானத்தைக் கவர்கின்ற கட்டமைப்பை ஒழுங்குபடுத்துவதற்காகவும் முகாமை செய்வதற்காகவும் ஏற்பாடுசெய்வதற்கும்; 2003 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்தை நீக்குவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

2.

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"சமாதானம், கல்வி, வலுவளிப்பு மற்றும் அபிவிருத்திக்கான விளையாட்டு நிறுவகத்தை (SPEED) கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்."

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் வெல்கம் ஹோட்டல்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 மே 24 ஆம் திகதிய 2229/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.07.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் எவிக் இன்டர்நெஷனல் ஹொட்டேல்ஸ் லங்கா லிமிட்டெட் தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 மே 24 ஆம் திகதிய 2229/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.07.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 ஏப்ரல் 19 ஆம் திகதிய 2224/2 ஆம் இலக்க மற்றும் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை, அவ்வர்த்தமானப் பத்திரிகை திருத்தப்பட்டு, 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ், 2021 யூலை 06 ஆம் திகதிய 2235/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.07.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

சுகாதார அமைச்சர்,— குறைநிரப்புத் தொகை— செலவினத் தலைப்பு 441 - நிகழ்ச்சித்திட்டம் 01 மற்றும் 02,— † 2021 சனவரி 01 ஆம் திகதியில் ஆரம்பமாகி 2021 டிசெம்பர் 31 ஆம் திகதியில் நிறைவடைகின்ற நிதியாண்டின் பயன்பாட்டிற்காக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசிற்குரிய ஏனைய எந்தவொரு நிதியத்திலிருந்தும் அல்லது பணமாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தற்றுணிபின் பிரகாரம், அரசினால் பெற்றுக் கொள்ளப்படுகின்ற எந்தவொரு கடன் தொகையிலிருந்தும் ரூபா பதினொராயிரத்து எண்ணூற்று நாற்பத்தி மூன்று தசம் ஏழு மில்லியன் (ரூபா 11,843,700,000) ஐ மிகைக்காத மேலதிக தொகையொன்றினை அட்டவணையில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் செலவிடப்படலாமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக:—

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| **தலைப்பு 441** - | ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் | | |
| **நிகழ்ச்சித்திட்டம் 01** - | தொழிற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் | | |
| | மீண்டெழும் செலவினம் | ரூ. | 115,700,000 |
| | மூலதனச் செலவினம் | ரூ. | 19,000,000 |
| **நிகழ்ச்சித்திட்டம் 02** - | அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | | |
| | மீண்டெழும் செலவினம் | ரூ. | 11,455,000,000 |
| | மூலதனச் செலவினம் | ரூ. | 254,000,000 |

| | | |
|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | ரூ. | 11,570,700,000 |
| மூலதனச் செலவினம் | ரூ. | 273,000,000 |
| **மொத்தச் செலவினம்** | **ரூ.** | **11,843,700,000** |

(ரூபா பதினொராயிரத்து எண்ணூற்று நாற்பத்தி மூன்று தசம் ஏழு மில்லியன்)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2021 யூலை 19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீட்டைப் பார்க்க. 1 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா 200,000,000,000 ஆகும்.

* 6.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2021 யூலை 08) [1].

* 7.

குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2021 யூலை 08),— "2019 யூன் 03 ஆந் திகதிய 2126/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு குடிவருவோர், குடியகல்வோர் ஒழுங்குவிதிகளை ஒழிப்பதற்காக (351 அத்தியாயமான) குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின், 23 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 52 ஆம் பிரிவின் கீழ் பாதுகாப்பு அமைச்சரால் விதிக்கப்பட்டதும் 2021.06.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 8.

நிதி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 மே 06 ஆம் திகதிய 2226/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.06.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

கைத்தொழில் அமைச்சர்,— தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 14(1)(ஊ) மற்றும் 15 ஆம் பிரிவுடன் உடன் வாசிக்க வேண்டிய, 53 ஆம் பிரிவின் கீழ் இரத்தினக்கல் மற்றும் ஆபரண உரிமக் கட்டணம் தொடர்பில் கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவ அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 மார்ச் 02 ஆம் திகதிய 2165/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் அச்சுப் பிழைகள் திருத்தப்பட்டு, 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபைச் சட்டத்தின் பிரிவு 53 இன் கீழ் கைத்தொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2021 ஏப்ரல் 01 ஆம் திகதிய 2221/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.06.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

நிதி அமைச்சர்,— பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் 75 ஆம் பிரிவின் கீழ், பெறுமதி சேர் வரி தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2021 மே 20 ஆம் திகதிய 2228/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.07.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

கொரோனா வைரஸ் தொற்று (கொவிட்-19) (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

நிதிச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

தேருநர்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— 2015 சனவரி மாதம் 08 ஆம் திகதியிலிருந்து 2019 நவம்பர் மாதம் 16 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் பதவி வகித்த அரசாங்க உத்தியோகத்தர்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்களின் ஊழியர்கள், முப்படையினர் மற்றும் பொலிஸ் சேவை உறுப்பினர்கள் ஆகியோர்களுக்கு இடம்பெற்றுள்ளதாக கூறப்படும் அரசியல் ரீதியிலான பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராய்ந்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் செயற்படுத்துதல்,—

மேற்குறித்த விடயம் சம்பந்தமாக அதிமேதகு சனாதிபதி அவர்களினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 2021.01.15 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு ஏற்புடைய அமைப/21/0105/301/003 ஆம் இலக்க, 2021.02.15 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு ஏற்ப பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக அமைச்சரவையின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது:—

(அ) சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை (அதன் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் தொகுதிகளையும், எழுத்துப் பிழைகள் மற்றும் அச்சுப் பிழைகள் என்பவற்றைத் திருத்தும் பின் இணைப்பையும் உள்ளடக்கிய) பிரேரணை அங்கீகாரமொன்றினூடாக பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்;

(ஆ) அந்த இறுதி அறிக்கையின் முதலாம் தொகுதியின் 08 ஆம் இலக்க விடயத்தின் கீழ் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஊழல் எதிர்ப்புக் குழு சம்பந்தமாக அந்த ஆணைக்குழுவினால் செய்யப்பட்டுள்ள தீர்மானங்களையும், சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்தல்;

(இ) குறித்த 08 ஆம் இலக்க விடயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1 ஆம் இலக்கத் தீர்மானம் மற்றும் 1 ஆம் இலக்க சிபாரிசு என்பவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றினை நியமித்தல் அல்லது பாராளுமன்றத்தினால் அதற்காக விதித்துரைக்கப்படும் பிற பொருத்தமான வழிமுறையொன்றினை மேற்கொள்ளுதல்;

(ஈ) மேற்குறித்த விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் தொகுதிகளில் மற்றும் அந்த இறுதி அறிக்கையின் எழுத்துப் பிழைகள் மற்றும் அச்சுப் பிழைகள் என்பவற்றைத் திருத்தும் பின்

இணைப்பில் 08 ஆம் இலக்க விடயத்திலும் 09 ஆம் இலக்க விடயத்தில் I முதல் LXI வரையிலுமுள்ள முறைப்பாடுகளுக்கு உரியதாக அந்த ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்தும் பொருட்டு, இந்த தீர்மானங்கள் மற்றும் சிபாரிசுகளை இலஞ்ச அல்லது ஊழல் முறைப்பாடுகள் பற்றி புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவுக்கும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் உரிய அமைச்சுக்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் உரிய அதிகாரிகளுக்கும் அனுப்புதல்; மற்றும்

(உ) குறித்த இறுதி அறிக்கையின் மூன்றாம் தொகுதியில் 10 ஆம் இலக்க விடயத்தின் கீழ் குறிப்பிடப்படும் முறைப்பாடுகளுக்கு உரியதாக குறித்த சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்தல்

அதற்கேற்ப, மேலே (இ) இல் குறிப்பிடப்பட்டவாறு 2221/54 ஆம் இலக்க, 2021.04.01 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி ஊடாக அதிமேதகு சனாதிபதி அவர்களினால் விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளமையினால், மேற்குறித்த அமைச்சரவைத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் உள்ளடங்கியுள்ள 08 ஆம் இலக்க விடயத்தின் தீர்மானங்கள் மற்றும் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக விசேட சனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை கிடைத்த பின்பு கருத்திற்கொள்வதற்கு உட்பட்ட வகையில் குறித்த அமைச்சரவைத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராய்ந்து தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் (அதன் முதலாம், இரண்டாம், மூன்றாம் தொகுதிகளையும் எழுத்துப் பிழைகள் மற்றும் அச்சுப் பிழைகள் என்பவற்றைத் திருத்தும் பின் இணைப்பினையும் உள்ளடக்கிய) 08 ஆம் இலக்க விடயத்தைத் தவிர்த்து 09 மற்றும் 10 ஆம் இலக்க விடயங்களில் உள்ளடங்கியுள்ள தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் மேலே (ஈ) மற்றும் (உ) இல் குறிப்பிடப்பட்டவாறு நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்ற பிரேரணை நிறைவேற்றுமாக.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] “சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

1.

1900/2021

கௌரவ அநுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற ஒதுக்கங்கள் அல்லது முகாமைத்துவ பிரதேசங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) அந்த ஒவ்வோரு ஒதுக்கம் அல்லது முகாமைத்துவ பிரதேசம் அவ்வாறு ஒதுக்கம் அல்லது முகாமைத்துவ பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் ஒவ்வொன்றினதும் இலக்கம் மற்றும் திகதி என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) அந்த வர்த்தமானி அறிவித்தல்களை சபாபீடத்திற்குச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) ஏதேனும் பிரதேசத்தை, ஒதுக்கம் அல்லது முகாமைத்துவ பிரதேசமாக பிரகடனம் செய்து வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலொன்றை இரத்துச்செய்து வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல்கள் உள்ளனவா என்பதையும்;

(v) அவ்வாறாயின், அத்தகைய வர்த்தமானி அறிவித்தல் ஒவ்வொன்றினதும் இலக்கம் மற்றும் திகதி என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

(vi) மேற்படி வர்த்தமானி அறிவித்தல்களை சபாபீடத்திற்குச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி திணைக்களத்தின் கீழ், எதிர்காலத்தில் ஒதுக்கங்கள் அல்லது முகாமைத்துவ பிரதேசங்களாக பிரகடனப்படுத்தத் திட்டமிட்டுள்ள பிரதேசங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

1901/2021

கௌரவ அநுர திசாநாயக்க,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கீழ் காணப்படும் ஒதுக்கங்களின் அல்லது முகாமைத்துவப் பிரதேசங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு ஒதுக்கம் அல்லது முகாமைத்துவப் பிரதேசம் அவ்வாறு ஒதுக்கமாக அல்லது முகாமைத்துவப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்ட ஒவ்வொரு வர்த்தமானி அறிவித்தலின் இலக்கம் மற்றும் திகதி என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி வர்த்தமானி அறிவித்தல்களை சபாபீடத்திற்குச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) யாதேனுமொரு பிரதேசம், ஒதுக்கமாக அல்லது முகாமைத்துவப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் உள்ளனவா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த ஒவ்வொரு வர்த்தமானி அறிவித்தலினதும் இலக்கம் மற்றும் திகதி என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

(vi) மேற்படி வர்த்தமானி அறிவித்தல்களை சபாபீடத்திற்குச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி அதிகார சபையின் கீழ் எதிர்வரும் காலத்தில் ஒதுக்கங்களாக அல்லது முகாமைத்துவப் பிரதேசங்களாக பிரகடனப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள பிரதேசங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1902/2021

கௌரவ அநுர திசாநாயக்க,— வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வனப்பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் காணப்படும் ஒதுக்கங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு ஒதுக்கமும் அவ்வாறு ஒதுக்கமாக பிரகடனப்படுத்தப்பட்ட ஒவ்வொரு வர்த்தமானி அறிவித்தலினதும் இலக்கம் மற்றும் திகதி என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி வர்த்தமானி அறிவித்தல்களை சபாபீடத்திற்குச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) யாதேனுமொரு பிரதேசம், ஒதுக்கமாக பிரகடனப்படுத்தப்பட்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் உள்ளனவா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த ஒவ்வொரு வர்த்தமானி அறிவித்தலினதும் இலக்கம் மற்றும் திகதி என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

(vi) மேற்படி வர்த்தமானி அறிவித்தல்களை சபாபீடத்திற்குச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி திணைக்களத்தின் கீழ் எதிர்வரும் காலத்தில் ஒதுக்கங்களாக அல்லது முகாமைத்துவப் பிரதேசங்களாக பிரகடனப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள பிரதேசங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1903/2021

கௌரவ அநுர திசாநாயக்க,— வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வனசீவராசிகள் திணைக்களத்தின் கீழ் காணப்படும் ஒதுக்கங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு ஒதுக்கமும் அவ்வாறு ஒதுக்கமாக பிரகடனப்படுத்தப்பட்ட ஒவ்வொரு வர்த்தமானி அறிவித்தலினதும் இலக்கம் மற்றும் திகதி என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி வர்த்தமானி அறிவித்தல்களை சபாபீடத்திற்குச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) யாதேனுமொரு பிரதேசம், ஒதுக்கமாக பிரகடனப்படுத்தப்பட்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் உள்ளனவா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த ஒவ்வொரு வர்த்தமானி அறிவித்தலினதும் இலக்கம் மற்றும் திகதி என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

(vi) மேற்படி வர்த்தமானி அறிவித்தல்களை சபாபீடத்திற்குச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி திணைக்களத்தின் கீழ் எதிர்வரும் காலத்தில் ஒதுக்கங்களாக அல்லது முகாமைத்துவப் பிரதேசங்களாக பிரகடனப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள பிரதேசங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1904/2021

கௌரவ அநுர திசாநாயக்க,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பாறை, மஹஓயா, பொல்லேபெத்த, கல்வலயாய பாதுகாக்கப்பட்ட வனத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பாரியளவிலான காடழிப்பு தொடர்பில் அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியை வெட்டி வெளியாக்கும்போது சுற்றாடல் சட்டத்துக்கு அமைய நடவடிக்கையெடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கடிதத்தின் பிரதியொன்று பெற்றுத்தரப்படுமா என்பதையும்;

(iii) மேற்படி வனத்தில் வெட்டி வெளியாக்கப்பட்ட பகுதிகள் பரிசோதிக்கப் பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) அவ்வாறு வெட்டி வெளியாக்கப்பட்ட போது சூழலுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், ஏற்பட்டுள்ள சூழல் பாதிப்பின் தன்மை யாது என்பதையும்;

(vi) மேற்படி சூழல் பாதிப்பு தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

1905/2021

கௌரவ அநுர திசாநாயக்க,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹஓயா மகாவலி வதிவிடத் திட்ட முகாமையாளர் அலுவலகத்தின் கீழ் காணப்படுகின்ற காணிகளின் அளவு யாது என்பதையும்;

(ii) அவற்றில் இதுவரை மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படாதுள்ள காணிகளின் அளவு யாது என்பதையும்;

(iii) அதற்குரிய உத்தியோகபூர்வ ஆவணம் சபாபீடத்திற்குச் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மஹஓயா, பொல்லேபெத்த விவசாய அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு யாது என்பதையும்;

(ii) மேற்படி காணிகள் வழங்கப்பட்டுள்ள கம்பெனிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு கம்பெனிக்கும் வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு தனித்தனியே யாது என்பதையும்;

(iv) மேற்படி காணிகளில் ஒரு ஏக்கர் காணி விற்பனை செய்யப்பட்டுள்ள அல்லது குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(v) அதன் மூலம் அறவிட்டுக்கொள்ளப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு என்பதையும்;

(vi) மேற்படி காணிகள் ஒப்பந்தங்களின் அடிப்படையில் வழங்கப்பட்டிருப்பின், அவ்வொப்பந்தங்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி (ஆ) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள கம்பெனிகளினால் மேற்கொள்ளப்படும் விவசாயக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) அவை தொடர்பிலான கருத்திட்ட அறிக்கைகள் சபாபீடத்திற்குச் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டங்களை அமுல்படுத்தும் போது உரிய ஒப்பந்த நிபந்தனைகள் பின்பற்றப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) இல்லையெனில், அதற்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

7.

1907/2021

கௌரவ அநுர திசாநாயக்க,— வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தில் வனப் பாதுகாப்புத் திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகளின் அளவு ஹெக்டேயர்களில் எவ்வளவென்பதையும்;

(ii) அவற்றில் மகாஓய மற்றும் பதியதலாவ பிரதேச செயலகப் பிரிவுகளுக்குச் சொந்தமான காணிகளின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மகாஓய கல்வலயாய பிரதேசத்தின் வனப்பகுதி, திணைக்களத்தின் நிருவாகத்தின் கீழ் காணப்பட்ட காலப்பகுதி யாதென்பதையும்;

(iv) மேற்படி திணைக்களம் மேற்குறிப்பிட்ட வனப்பகுதியின் நிருவாகத்தினை கைவிட்ட திகதியும் அதற்கான காரணங்களும் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) திணைக்களத்தினால் கல்வலயாய பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒவ்வொரு வனப் பயிர்ச்செய்கை கருத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்ட வருடம் மற்றும் அதற்காக செலவிடப்பட்ட தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) பயிரிடப்பட்ட வனப்பகுதியை அளந்து எல்லைக் கற்கள் இடப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், எல்லைக் கற்கள் இடப்பட்ட வருடமும் அதற்கென செலவிடப்பட்ட தொகையும் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) கல்வலயாய பிரதேசத்தின் வனப்பகுதிக்குரிய காணிகளில் அரச வன ஒதுக்கங்களாக வர்த்தமானியில் வெளியிடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள காணியின் அளவு ஹெக்டேயர்களில் எவ்வளவென்பதையும்;

(ii) அக் காணிகள் வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்படவுள்ள திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி வர்த்தமானியை வெளியிடுவதில் தாமதம் ஏற்படுவதற்கு ஏதுவான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

8.

2110/2021

கௌரவ ரஊப் ஹகீம்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி முகாமைத்துவ நடவடிக்கைகளை முறைப்படுத்தல்" எனும் தலைப்பிலான 11/0737/533/015 ஆம் இலக்க மற்றும் 2011.05.04 ஆம் திகதிய அமைச்சரவை கொள்கைத் தீர்மானத்தினை நடைமுறைப்படுத்தும் வகையில் "வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் அரச காணிகள் தொடர்பான பிணக்குகளைத் தீர்க்கும் துரித நிகழ்ச்சித் திட்டம்" எனும் தலைப்பில் காணி ஆணையாளர் நாயகத்தினால் 2013/01 ஆம் இலக்க மற்றும் 2013.01.31 ஆம் திகதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி சுற்றறிக்கையின் 2.2.2.1, 2.2.3.4, 2.2.3.5 மற்றும் 3.5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் அம்பாறை மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களின்போது வழங்கப்பட்ட தீர்வுகள் யாவை என்பதையும்;

(iv) பிணக்குகளுக்கான தீர்வுகள் வழங்கப்பட்ட ஒவ்வொரு நபரின் பெயர் மற்றும் முகவரி ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவு ரீதியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

2111/2021

கௌரவ ரஊப் ஹகீம்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) “கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி முகாமைத்துவ நடவடிக்கைகளை முறைப்படுத்தல்” எனும் தலைப்பிலான 11/0737/533/015 ஆம் இலக்க மற்றும் 2011.05.04 ஆம் திகதிய அமைச்சரவை கொள்கைத் தீர்மானத்தினை நடைமுறைப்படுத்தும் வகையில் “வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் அரச காணிகள் தொடர்பான பிணக்குகளைத் தீர்க்கும் துரித நிகழ்ச்சித் திட்டம்” எனும் தலைப்பில் காணி ஆணையாளர் நாயகத்தினால் 2013/01 ஆம் இலக்க மற்றும் 2013.01.31 ஆம் திகதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி சுற்றறிக்கையின் 2.2.2.1, 2.2.3.4, 2.2.3.5 மற்றும் 3.5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் மன்னார் மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களின்போது வழங்கப்பட்ட தீர்வுகள் யாவை என்பதையும்;

(iv) பிணக்குகளுக்கான தீர்வுகள் வழங்கப்பட்ட ஒவ்வொரு நபரின் பெயர் மற்றும் முகவரி ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவு ரீதியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

2112/2021

கௌரவ ரஊப் ஹகீம்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) “கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி முகாமைத்துவ நடவடிக்கைகளை முறைப்படுத்தல்” எனும் தலைப்பிலான 11/0737/533/015 ஆம் இலக்க மற்றும் 2011.05.04 ஆம் திகதிய அமைச்சரவை கொள்கைத் தீர்மானத்தினை நடைமுறைப்படுத்தும் வகையில் “வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் அரச காணிகள் தொடர்பான பிணக்குகளைத் தீர்க்கும் துரித நிகழ்ச்சித் திட்டம்” எனும் தலைப்பில் காணி ஆணையாளர் நாயகத்தினால் 2013/01 ஆம் இலக்க மற்றும் 2013.01.31 ஆம் திகதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி சுற்றறிக்கையின் 2.2.2.1, 2.2.3.4, 2.2.3.5 மற்றும் 3.5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் திருகோணமலை மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களின்போது வழங்கப்பட்ட தீர்வுகள் யாவை என்பதையும்;

(iv) பிணக்குகளுக்கான தீர்வுகள் வழங்கப்பட்ட ஒவ்வொரு நபரின் பெயர் மற்றும் முகவரி ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவு ரீதியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

2113/2021

கௌரவ ரஊப் ஹகீம்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி முகாமைத்துவ நடவடிக்கைகளை முறைப்படுத்தல்" எனும் தலைப்பிலான 11/0737/533/015 ஆம் இலக்க மற்றும் 2011.05.04 ஆம் திகதிய அமைச்சரவை கொள்கைத் தீர்மானத்தினை நடைமுறைப்படுத்தும் வகையில் "வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் அரச காணிகள் தொடர்பான பிணக்குகளைத் தீர்க்கும் துரித நிகழ்ச்சித் திட்டம்" எனும் தலைப்பில் காணி ஆணையாளர் நாயகத்தினால் 2013/01 ஆம் இலக்க மற்றும் 2013.01.31 ஆம் திகதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி சுற்றறிக்கையின் 2.2.2.1, 2.2.3.4, 2.2.3.5 மற்றும் 3.5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களின்போது வழங்கப்பட்ட தீர்வுகள் யாவை என்பதையும்;

(iv) பிணக்குகளுக்கான தீர்வுகள் வழங்கப்பட்ட ஒவ்வொரு நபரின் பெயர் மற்றும் முகவரி ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவு ரீதியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

2114/2021

கௌரவ ரஊப் ஹகீம்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி முகாமைத்துவ நடவடிக்கைகளை முறைப்படுத்தல்" எனும் தலைப்பிலான 11/0737/533/015 ஆம் இலக்க மற்றும் 2011.05.04 ஆம் திகதிய அமைச்சரவை கொள்கைத் தீர்மானத்தினை நடைமுறைப்படுத்தும் வகையில் "வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் அரச காணிகள் தொடர்பான பிணக்குகளைத் தீர்க்கும் துரித நிகழ்ச்சித் திட்டம்" எனும் தலைப்பில் காணி ஆணையாளர் நாயகத்தினால் 2013/01 ஆம் இலக்க மற்றும் 2013.01.31 ஆம் திகதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி சுற்றறிக்கையின் 2.2.2.1, 2.2.3.4, 2.2.3.5 மற்றும் 3.5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் வவுனியா மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களின்போது வழங்கப்பட்ட தீர்வுகள் யாவை என்பதையும்;

(iv) பிணக்குகளுக்கான தீர்வுகள் வழங்கப்பட்ட ஒவ்வொரு நபரின் பெயர் மற்றும் முகவரி ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவு ரீதியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

2115/2021

கௌரவ ரஊப் ஹகீம்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி முகாமைத்துவ நடவடிக்கைகளை முறைப்படுத்தல்" எனும் தலைப்பிலான 11/0737/533/015 ஆம் இலக்க மற்றும் 2011.05.04 ஆம் திகதிய அமைச்சரவை கொள்கைத் தீர்மானத்தினை நடைமுறைப்படுத்தும் வகையில் "வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் அரச காணிகள் தொடர்பான பிணக்குகளைத் தீர்க்கும் துரித நிகழ்ச்சித் திட்டம்" எனும் தலைப்பில் காணி ஆணையாளர் நாயகத்தினால் 2013/01 ஆம் இலக்க மற்றும் 2013.01.31 ஆம் திகதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி சுற்றறிக்கையின் 2.2.2.1, 2.2.3.4, 2.2.3.5 மற்றும் 3.5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களின்போது வழங்கப்பட்ட தீர்வுகள் யாவை என்பதையும்;

(iv) பிணக்குகளுக்கான தீர்வுகள் வழங்கப்பட்ட ஒவ்வொரு நபரின் பெயர் மற்றும் முகவரி ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவு ரீதியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

14.

2116/2021

கௌரவ ரஊப் ஹகீம்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி முகாமைத்துவ நடவடிக்கைகளை முறைப்படுத்தல்" எனும் தலைப்பிலான 11/0737/533/015 ஆம் இலக்க மற்றும் 2011.05.04 ஆம் திகதிய அமைச்சரவை கொள்கைத் தீர்மானத்தினை நடைமுறைப்படுத்தும் வகையில் "வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் அரச காணிகள் தொடர்பான பிணக்குகளைத் தீர்க்கும் துரித நிகழ்ச்சித் திட்டம்" எனும் தலைப்பில் காணி ஆணையாளர் நாயகத்தினால் 2013/01 ஆம் இலக்க மற்றும் 2013.01.31 ஆம் திகதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி சுற்றறிக்கையின் 2.2.2.1, 2.2.3.4, 2.2.3.5 மற்றும் 3.5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களின்போது வழங்கப்பட்ட தீர்வுகள் யாவை என்பதையும்;

(iv) பிணக்குகளுக்கான தீர்வுகள் வழங்கப்பட்ட ஒவ்வொரு நபரின் பெயர் மற்றும் முகவரி ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவு ரீதியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?